©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 48] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 29, 2017
கார்த்திகை 13, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

**நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் (உணவு மற்றும் பொது விநியோகத் துறை), ஆணை புது டில்லி, 28–8–2017.**

*[அரசாணை (நிலை) எண் 141, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, 27 செப்டம்பர் 2017.]*

**G.S.R. 1069 (E).**—1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1955) 3 பிரிவு மற்றும் 1966 ஆம் ஆண்டு சர்க்கரை (கட்டுப்பாடு) ஆணையின் 5 ஆம் பகுதி ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசானது மாத இறுதியில் யாதொரு சர்க்கரை உற்பத்தியாளரும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு அதிகமாக எந்தவித சர்க்கரை இருப்பையும் வைத்திருக்கக் கூடாது என இதனால் உத்தரவிடுகிறது:–

| | | | |
|---|---|---|---|
| (a) | 2017 செப்டம்பர் | : | 2016–17 ஆம் ஆண்டு சர்க்கரைப் பருவத்தின் போது, அவர்களுக்குக் கிடைக்கப்பெறும் மொத்த சர்க்கரையில் இருபத்தியொரு சதவீதம். |
| (b) | 2017 அக்டோபர் | : | 2016–17 ஆம் ஆண்டு சர்க்கரைப் பருவத்தின் போது, அவர்களுக்குக் கிடைக்கப்பெறும் மொத்த சர்க்கரையில் எட்டு சதவீதம். |

**2.** தனியொரு உற்பத்தியாளரிடம் கிடைக்கப்பெறும் மொத்த சர்க்கரையின் அளவு பின்வருமாறு கணக்கிடப்பட வேண்டும்:

“01–10–2016 அன்றுள்ளவாறு சர்க்கரையின் ஆரம்ப இருப்பு + 2016–17 ஆம் ஆண்டு சர்க்கரைப் பருவத்தில் உறுபத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு – 2016–17 ஆம் ஆண்டு சர்க்கரைப் பருவத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு + 2016–17 ஆம் ஆண்டு சர்க்கரைப் பருவத்தில் இறக்குமதி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு”.

**3.** மேலும் 1966 ஆம் ஆண்டு சர்க்கரை (கட்டுப்பாடு) ஆணையின் 15 ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசானது மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி நிருவாகங்களுக்கு இந்த ஆணையைச் செயல்படுத்துவதற்கு இதனால் அதிகாரமளிக்கிறது.

**4.** இந்த ஆணை, ***அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

[F.No. 1(6)/2016-SP-I]

**சுபாசிஷ் பாண்டா,**
*இணைச் செயலாளர்.*

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**குமார் ஜெயந்த்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

**நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்(நுகர்வோர் விவகாரங்கள் துறை), ஆணை புதுடில்லி, 25—8—2017.**

*[அரசாணை (நிலை) எண் 146, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (H1)த் துறை, 19 அக்டோபர் 2017.]*

**S.O.2785(E).**— 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1955) 3 பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு 2016 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச்செல்வதற்கான கடப்பாடுகள் நீக்குதல் ஆணையில் மேற்கொண்டும் திருத்தம் செய்வதற்காக, பின்வரும் ஆணையை இதனால் பிறப்பிக்கிறது அதாவது:—

**1. குறுந்தலைப்பும் தொடக்கமும்:—**

(1) இந்த ஆணை 2017—ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச்செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் (மூன்றாம் திருத்தம்) ஆணை என்று அழைக்கப்படும்.

(2) இந்த ஆணை ***அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. 2016 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச்செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணையின் 3 ஆம் பகுதியை சேர்ந்த (2) உட்பகுதியில், (iii) ஆம் இனத்திற்குப் பின், பின்வரும் இனம் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது.

"(iv) 31-10-2017 வரையிலான கால அளவிற்கு, வெங்காயம்."

[F. No. S-10/3/2017-ECR&E]

**பி.வி. ராமா சாஸ்திரி,**
*இணைச் செயலாளர்.*

**குறிப்பு:** முதன்மை ஆணை மத்திய ***அரசின் அரசிதழின் சிறப்பு வெளியீட்டில்*** பாகம் II**–**பிரிவு **3**, உட்பிரிவு (i) இல் வெளியிடப்பட்டுள்ளது; **(**காண்க: **–** G.S.R**. 929** (E) 29-09-2016), பின்னர் திருத்தப்பட்டதை **27–10–2016** ஆம் நாளிட்ட S.O.**3341** (E) 25-04-2017 ஆம் நாளிட்ட S.O.**1288** (E) மற்றும் **17–05–2017** ஆம் நாளிட்ட S.O.**1600** (E) ஆகியவற்றில் காண்க**.**

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**குமார் ஜெயந்த்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது**.**